சுருக்கம்

பொதுப் பணிகள் – ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் – எட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை இணைத்து நான்காக மாற்றி – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை

அரசாணை நிலை எண். 65

நாள்: 3.4.2008
சர்வஜித், பங்குனி 21
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க:

1. அரசாணை நிலை எண். 53, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.19.11.1976
1. அரசாணை நிலை எண்.254, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.31.7.1995
2. அரசாணை நிலை எண்.358, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.26.9.1996
3. அரசாணை நிலை எண்.75, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.27.6.2006
4. அரசாணை நிலை எண்.125, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.14.8.2006

மேலும் படிக்க:

5. அரசாணை (டி) எண்.28, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (என்) துறை, நாள்.5.2.2008

ஃஃஃஃ

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மூன்று ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிகளில் ஒரு ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிக்கு முதுநிலை காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள இந்திய ஆட்சிப் பணியை வகிப்பவராக இருப்பதற்கும் மற்ற இரண்டு துணை ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ளவராக அவர்களுக்குரிய வரையறைகளுடன் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிகள் உருவாக்க ஒப்புதல் அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒரு கூடுதல் துணை ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவியை, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில், ஆதரவுப் பணியாளர்களுடன் உருவாக்க ஒப்புதல் அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பல வழக்குகள் விசாரணைக்காக ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் மற்றும் துணை ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் முன்னர் இருந்தது அரசின் கவனத்திற்கு வந்ததால், அரசு அப்போதைய நிலைமையை மறு ஆய்வு செய்து, தீர்ப்பாயங்கள், குற்ற வழக்கிடுபவர்கள், மாவட்ட தலைமையகங்களிலிருந்தோ

அல்லது மண்டல நிலைகளிலிருந்தோ இயங்கும் பொருட்டு, கூடுதலாக உருவாக்க முடிவு செய்தது. எனவே, மேலே குறிப்பிட்டுள்ள ஆணைகளுக்கு பதிலிட்டகற்றீடாக, துணை ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் மற்றும் கூடுதல் துணை ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிகளை நீக்கி, பத்து ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர் பதவிகளை உருவாக்க மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. இருப்பினும், இப்பதவிகள் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களாலோ அல்லது மாவட்ட வருவாய் அலுவலர்களாலோ அல்லது மாவட்ட வருவாய் அலுவலருக்கான ஊதியம் பெறும் நிலையிலுள்ள மற்ற அலுவலர்களாலோ நிரப்பப்படலாம். ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்களின் தலைமையகங்கள் மற்றும் அவர்கள் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டிய மாவட்டங்களும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பு III ல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், 1–9–2006 முதல் இராமநாதபுரம் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தை மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு மதுரை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடனும், தஞ்சாவூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தை திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு திருச்சி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடனும் இணைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மொத்தம் உள்ள எட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களிலுள்ள தற்காலிகப் பணியிடங்கள் அனைத்திற்கும் 31.12.2008 வரை பணி நீட்டிப்பு செய்து, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. தற்போது, ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறைந்து வருகின்ற நிலையில், எட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை இணைத்து நான்காக மாற்றி அமைப்பது குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. அவ்வாறே, வேலூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தை, சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடனும், கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தை, சேலத்தைத் தலைமையகமாகக் கொண்டு சேலம் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடனும், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு மதுரை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடனும் இணைப்பது குறித்தும் மற்றும் திருச்சி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தை தற்போது இயங்கி வருவது போன்றே, தற்போதுள்ள மாவட்டங்களுடன் இயங்க அனுமதிக்கலாம் எனவும் அரசு முடிவு செய்தது. சென்னை, சேலம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்குரிய மாவட்டங்கள் இணைப்பில் உள்ளவாறு மாற்றியமைக்கவும் அரசு முடிவு செய்தது.

4. அதன்படி அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(அ) வேலூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமானது, சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.4.2008 முதல் இணைக்கப்படுகிறது.

(ஆ) கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமானது, சேலத்தைத் தலைமையகமாகக் கொண்டு சேலம் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.4.2008 முதல் இணைக்கப்படுகிறது.

(இ) நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களும் மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு மதுரை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.4.2008 முதல் இணைக்கப்படுகிறது.

(ஈ) திருச்சி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமானது தற்போது இயங்கி வருவது போன்றே தற்போதுள்ள மாவட்டங்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

(த.பி.பா)

(உ) சென்னை, சேலம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்குரிய மாவட்டங்கள் இணைப்பில் உள்ளவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

(ஊ) வேலூர், கோயம்புத்தூர், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட தற்காலிகப் பணியிடங்களை 31.3.2008 பிற்பகல் வரை நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது.

(எ) வேலூர், கோயம்புத்தூர், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களின் அலுவலகக் கட்டிடங்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல், மாதக் கணக்குகளின் ஒத்திசைவு போன்ற எல்லாவிதமான நடைமுறைகளையும் 31.3.2008ற்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறும், அவரவர்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களை அவர்கள் எந்தெந்த மாவட்ட வருவாய் அலகிலிருந்து எடுக்கப்பட்டனரோ அதே மாவட்ட வருவாய் அலகிற்கே 31.3.2008 பிற்பகல் திருப்பி அனுப்புமாறும் வேலூர், கோயம்புத்தூர், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குத்சியா காந்தி,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்கள், சென்னை, வேலூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்
ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், சென்னை, வேலூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்.
அனைத்து துறைச் செயலாளர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
அனைத்து துறைத் தலைமையகங்கள், (மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நீதிபதிகள் உள்பட).
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9 / மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்.
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) (தணிக்கை), சென்னை-18/35.
பொது (சிறப்பு.அ) துறை, சென்னை-9.
விழிப்புப் பணி ஆணையம், சென்னை-9.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
விழிப்புப் பணி ஆணையர், சென்னை-9.
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
நிதித் (பொது/வரவு செலவு II / சிஎம்பிசி) துறை, சென்னை-9.
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (நிசீ.II) துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப் படி அனுப்பப் படுகிறது//

பிரிவு அலுவலர்.

(த.பி.பா)

## இணைப்பு

**ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், அவற்றின் தலைமையகங்கள் மற்றும் அவற்றிற்குரிய மாவட்டங்கள்.**

| வரிசை எண் | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தின் பெயர் | தலைமையகங்கள் | மாவட்டங்களின் பெயர்கள் | |
|---|---|---|---|---|
| 1. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை. | சென்னை | 1 | சென்னை |
| | | | 2 | திருவள்ளூர் |
| | | | 3 | காஞ்சிபுரம் |
| | | | 4 | வேலூர் |
| | | | 5 | திருவண்ணாமலை |
| | | | 6 | விழுப்புரம் |
| 2. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சேலம். | சேலம் | 1 | கோயம்புத்தூர் |
| | | | 2 | நீலகிரி |
| | | | 3 | ஈரோடு |
| | | | 4 | சேலம் |
| | | | 5 | நாமக்கல் |
| | | | 6 | தர்மபுரி |
| | | | 7 | கிருஷ்ணகிரி |
| 3. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், மதுரை | மதுரை | 1 | மதுரை |
| | | | 2 | திண்டுக்கல் |
| | | | 3 | தேனி |
| | | | 4 | திருநெல்வேலி |
| | | | 5 | விருதுநகர் |
| | | | 6 | கன்னியாகுமரி |
| | | | 7 | தூத்துக்குடி |
| | | | 8 | இராமநாதபுரம் |
| | | | 9 | சிவகங்கை |
| 4. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 1 | திருச்சிராப்பள்ளி |
| | | | 2 | கரூர் |
| | | | 3 | புதுக்கோட்டை |
| | | | 4 | தஞ்சாவூர் |
| | | | 5 | பெரம்பலூர் |
| | | | 6 | நாகப்பட்டிணம் |
| | | | 7 | திருவாரூர் |
| | | | 8 | கடலூர் |

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.